★ விலை ரூபா 1-00

ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஐப்பசி 30 முஹறு 29 இதழ் 276
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 16—11 82

# வினோபாஜி காலமானார்

(புதுடில்லி)

பூதான இயக்கத்தின் தந்தை ஆச்சார்ய வினோபா பாவே நேற்றுக் காலமானார். இறக்கும்போது வினோபாஜிக்கு 88 வயதாகும்.

இம் மாதம் 5-ம் திகதி மாரடைப்பினால் பீடிக்கப்பட்ட ஆச்சார்ய வினோபா பாவே மருந்து, உணவு எதனையும் உள்கொள்ள மறுத்துவிட்டார்.

இவரின் பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக பர்னார் ஆசிரமத்தில் வைக்கப்பட்டுள்ளது.

வினோபாஜி அமைதிப்புரட்சியான பூதான இயக்கத்தை நடத்தினார். இவரே பசுவதை தடுப்பு இயக்கத்தையும் நடத்தினார்.

தகனக்கிரியைகள் இன்று பர்னார் ஆச்சிரமத்திற்கு அண்மையிலுள்ள தாம் நதிக்கரையில் அமைக்கப்பட்ட இரண்டரை மீட்டர் உயரமான மேடையில் நடைபெறும்.

பிரஷ்நெவ்வின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக மாஸ்கோ சென்றுள்ள பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி இன்று புதுடில்லி திரும்பி, ஆச்சார்ய வினோபாபாவேயின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொள்வார். [வெ]

# புன்னாலைக்கட்டுவனில் நேற்றுக் காலை
# துப்பாக்கிசூட்டுக்கு ஒருவர்பலி!

## சந்தேகத்தின்மீது ஒருவர் கைது!

(யாழ்ப்பாணம்)

**புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்தவரும் ஐ தே க. பிரமுகருமான வி. தம்பாபிள்ளை ஐந்து பேர் கொண்ட கோஷ்டியினால் நேற்றுக்காலை 9-30மணியளவில் கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்!**

துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தைத் தொடர்ந்து இளைஞர் கோஷ்டியினால் கடையை நோக்கி வீசப்பட்ட கைக்குண்டினால், கொலையுண்ட தம்பாபிள்ளையின் கால்கள் எரிந்த நிலையில் காணப்பட்டன. இக்கைக்குண்டு பெற்றோல் கைக்குண்டாக இருக்கலாம் என்று பொலிசார் கருதுகின்றனர்.

### ஒருவர் கைது

இச்சம்பவத்தின் பின்னர் சில மணித்தியாலங்களில் அந்தப்பகுதி வழியாக வந்த இராணுவத்தினர் பலத்த தேடுதலின் பேரில் சந்தேகத்தின் மீது கே. அருந்தவராசா என்பவரைக் கைது செய்து பொலிசில் ஒப்படைத்துள்ளனர். விசாரணையின் போது இவர் காரைநகரைச்சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளதாம்.

### உறவினருடன் உரையாடிய போது ..

தம்பாபிள்ளை, புன்னாலைக்கட்டுவனிலுள்ள தமது வீட்டுடன் இணைந்த கடையில் நேற்று காலை 9-30 மணியளவில் தவிடுமூடை ஒன்றில் அமர்ந்து உறவினர் ஒருவருடன் உரையாடிக்கொண்டிருந்ததாகவும் அப்பொழுது மூன்று சைக்கிளில் வந்த ஐந்து இளைஞர்கள் சோடாபானம் கேட்டபொழுது கடையில் நிற்கும் தம்பாபிள்ளையின் சகோதரியின் மகன் கு. அருந்தவம் என்பவரைச் சோடா கொடுக்கும்படி அவர் சொன்னதாகவும் அவர் சோடா பானம் எடுக்கச் சென்றபொழுது அங்கு நின்ற இளைஞர்களில் ஒருவர் கைத்துப்பாக்கியை எடுத்து தம்பாபிள்ளையை நோக்கி சுட்டதாகவும் கதைத்துக்கொண்டு நின்ற உறவினர் அப்பொழுது அங்கிருந்து பீதியுடன் ஓடிவிட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

### சைக்கிளில் மறைந்தனர்

இளைஞர்கள் துப்பாக்கியால் சுட்டபின்னர் கைக்குண்டொன்றையும் வீசிவிட்டு சைக்கிளில் ஏறிச்சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் பின்னர் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு தம்பாபிள்ளை எடுத்துச் செல்லப்பட்டபோது அவர் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவருக்கு 4 ஆண்களும் ஒரு பெண்ணும் உள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## மதகுருமார் பலர் மீது குருநகர் முகாமில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு, குருநகர் இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்ட யாழ். மதகுருமார் மூவரில் ஒருவர் விடுவிக்கப்பட்டதாகவும் இருவர் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுவருவதாகவும் தெரியவருகிறது.

கொழும்புத்துறையிலுள்ள ஒரு வீட்டை பாதுகாப்புப் படையினர் நேற்று முன்தினம் அதிகாலை முற்றுகையிட்டு மூன்று மத குருமார்களான வண. பிதா ஆ சிங்கராயர், வண. பிதா ஜீவேந்திரா போல், வண. பிதா போல் நட்சேத்திரம் ஆகிய மூவரையும் குருநகர் ராணுவ முகாமுக்கு விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். இவர்களுடன் தமிழ்ஈழ விடுதலை அணியின் அமைப்புச் செயலாளர் திரு ஈழவேந்தனும் விசாரணைக்காக குருநகர் ராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இவர்களில் வண. பிதா போல் நட்சேத்திரம் விடுவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. திரு. ஈழவேந்தன் தினமும் மாலையில் விடுவிக்கப்பட்டு அடுத்தநாள் காலையில் ஆஜராகுமாறு பணிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

### விசாரணையில் மேலும் சிலர்

இவர்கள் தவிர, நாரந்தனையைச் சேர்ந்த வண பிதா றெஜினல்ட் ராஜநாயகம், கிளிநொச்சியைச்சேர்ந்த வண பிதா. சூசைநாயகம் ஆகியோரும் ராணுவ முகாமில் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### நெடுந்தீவில்

நெடுந்தீவு பங்குக் குருவான வண. பிதா சின்னராசா நேற்று ராணுவத்தினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

நேற்றுக் காலை 10 மணிக்கு வள்ளத்தில் இங்குவந்த ராணுவத்தினர் பங்குக்குரவரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். இப்பகுதியில் உள்ள மக்கள் ஏராளமாகத் திரண்டு நின்று கண்ணீர் மல்க பங்குகுரவரை வழியனுப்பி வைத்தனர்.

### வவனியாவில்

வவனியா பகுதியிலுள்ள வண பிதா. டி, ஜே கனகரத்தினத்தை நேற்றுக் காலை வவனியா பொலிஸார் விசாரணைக்காக அவரது இல்லத்திலிருந்து அழைத்துச்சென்றனர். இங்கிருந்து குருநகர் முகாமுக்கு அவர் கொண்டுசெல்லப்பட்டார்.

ஒலிப்பதிவு நாடாக்கள், கிறிஸ்மஸ் கார்ட்டுகள் ஆகியனவையும் பொலிஸார் இவரது இல்லத்திலிருந்து மீட்டனர் கிறிஸ்மஸ் வாழ்த்துக் கார்ட்டுகளில் தமிழ்ஈழம் குறித்து வாசகங்கள் இருந்ததாகத் தெரியவருகிறது.

நிலைமை இவ்வாறிருக்க, திருநெல்வேலியைச் சேர்ந்த ச. உமாகாந்தன் என்பவரும் விசாரணைக்காக நேற்று குருநகர் ராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு நேற்றிரவு விடுதலை செய்யப்பட்டார்.

## காலிச் சம்பவம்
### கமிஷனர் இன்று பார்வையிடுவார்

(காலி)

காலியில் கடந்த ஜூலையில் வன்முறைச்சம்பவங்கள் இடம்பெற்ற இடங்களை இச்சம்பவம் குறித்து விசாரித்து வரும் கமிஷனர் திரு. அலஸ் இன்று நேரில் சென்றுபார்வையிடுவார்.

இச் சம்பவங்கள் நடைபெற்ற இடங்களை நேரில் பார்வையிடுமாறு சட்டத்தரணி ஜனப். ஹமாபி ஹனிபா கோரிக்கை விடுத்ததை அடுத்தே ஆணையாளர் இன்று சம்பவங்கள் நடைபெற்ற இடத்தைப் பார்வையிடவுள்ளதாகத் தெரிவித்தார்.

நேற்றைய விசாரணையின் போது சட்டத்தரணி சொக்ஸி ஆஜரானார் [இ]

## மாணவர்கள் குழப்பம் !
## மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டது

[மட்டக்களப்பு]

மாணவர்களின் குழப்பத்தையடுத்து மட்டக்களப்பு பல்கலைக்கழகக்கல்லூரி காலவரையறையின்றி நேற்று நண்பகல் மூடப்பட்டது.

பல்கலைக்கழக உடமைகளுக்கு மாணவர்கள் சேதம்விளைவிக்க முயன்றதையடுத்தே பல்கலைக்கழகக்கல்லூரி மூடப்பட்டதாக கல்லூரி பணிப்பாளர் பேராசிரியர் எஸ். இராசரத்தினம் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை ராகிங் சம்பந்தமாக சிரேஷ்ட மாணவரொருவர் இடைநிறுத்தம் செய்யப்பட்டதாகவும், அதனையடுத்து மாணவர்கள் நேற்று தமது அலுவலகத்தின் முன்னால் அமர்ந்து அவரின் இடைநிறுத்த உத்தரவை வாபஸ் பெறும்படி கோரியதாகவும், தாம்இதற்கு மறுத்தபோது மாணவர்கள் பல்கலைக்கழக உடமைகளுக்கு கற்களை வீசி சேதம் விளைவிக்க முயன்றதாகவும் பல்கலைக்கழகக்கல்லூரி பணிப்பாளர் பேராசிரியர் இராசரத்தினம் தெரிவித்தார். பல்கலைக்கழகக்கல்லூரிக்கு பொலிசார் அழைக்கப்பட்டு, மாணவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது பல்கலைக்கழகக் கல்லூரிக்குள் மாணவர்கள் பிரவேசிக்கவும்தடை விதிக்கப்பட்டுள்ளது. [வெ]

## பிரஷ்நெவ் பூதவுடல் நல்லடக்கம்

(மாஸ்கோ)

சோவியத் ஜனாதிபதி லியோனிட் பிரஷ்நெவ்வின் பூதவுடல் மாஸ்கோவிலுள்ள செஞ்சதுக்கத்தில் பூரண அரசமரியாதைகளுடன் நேற்று அடக்கம் செய்யப்பட்டது.

லெனின் சமாதிக்கு அண்மையிலுள்ள கல்லறையிலேயே இவரின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

பிரஷ்நெவ்வின் மனைவி திருமதி விக்டோரியா பிரஷ்நெவ், மகன், மகள் ஆகியோரும் பூதவுடல் அடக்கம்செய்வதற்கு முன்னர் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

சோவியத்யூனியனின் புதிய அதிபர் திரு யூரி அந்ரபோவ் பிரஷ்நெவ்வின் சேவைகளை பாராட்டிப்பேசினார். உலக சமாதானத்திற்கு சேவையாற்றிய பிரஷ்நெவ்வின் வழியைப் பின்பற்றப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகத்தலைவர்கள் பலர் பிரஷ்நெவ்வின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (வெ)

## ப.நோ.கூ.ச.வில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ப நோ. கூ. சங்கத்தில் துப்பாக்கியைகாட்டி பயமுறுத்திய 3 இளைஞர்கள் 8,000ரூபாவை கொள்ளையடித்து சென்றதாகபொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் ஒருமணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது. [மா]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இல: 33 மூத்தவிநாயகர் கோவில் வீதியில் மூன்று பரப்பு காணி விற்பனைக்குண்டு. பாதிரிவேதக் கோவில் கதிரோலிக்கக் கோவில் நல்லூர் கந்தசாமி கோவில் என்பவற்றுக்கு ½மைல் தூரம் தொடர்பு: S. W. கோமகன் 3, சந்தண மாதா கோவில், சுண்டிக்குளி. 5173

கூடுதல் பயன்தரும் நல்லரக செவ்விளநீர்த் தென்னங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. மில்க் வைற் யாழ்ப்பாணம். 5174

திருமலையில் 5 பேர்ச் 40 ஆயிரம் ரூபாவாக கொடுக்கப்படும். தொடர்பு; பிறிகில்லா பிரான்சீன், மேறீன் வீதி, திருகோணமலை. 5168

மலிவு விலையில் திராந்தி மரங்கள் விற்பனைக்கு உண்டு. ஏலத்தில் வாங்கியவை. விபரங்களுக்கு 50/4 சங்கிலியன் வீதி, நல்லூர். 5167

எள்ளு மொத்தமாக தேவையானால் பதிவுசெய்யுங்கள் வெள்ளை கறுப்பு ரகங்கள் விலை சகாயம் எழுதுங்கள் வி. வி. எஸ். மல்லாகம். 5161

புகையிலை மொத்தமாக தேவைப்படுவோர் பதிவுசெய்யுங்கள் விலை சகாயம் சுருட்டுக்கு விஷேசம். எழுதுங்கள் வி. வி. எஸ். மல்லாகம். 5160

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கச்சேரி–நல்லூர் வீதியைச்சேர்ந்த ஆஸ்டின் இராஜநாயகம் பிறெக்கென்றிட்ஜ் என்பவரின் மரணசாதனமற்ற மரணச்சொத்துக்கள் சம்பந்தமான விடயத்தில்,

–மரணமெய்தியவர்

பிறெக்கென்றிட்ஜ் கைம்பெண் பத்மசுந்தரி, கச்சேரி நல்லூர்வீதி, யாழ்ப்பாணம்.

–மனுதார்

மரணச்சொத்து )
நியாயாதிக்கம் ) இல. 3696

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கானது மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரால் மேற்சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனமற்ற மரணச்சொத்துக்கள் மீதான நிர்வாக தத்துவங்கள் பெறுவதற்காக இந் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் திகதி முற்பகல் 9–00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இந் நீதிமன்றத்தில் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

1982ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

தா. குலஞானம்,
பதிவாளர்.

தயாரித்தது!
L. B தம்பிராஜா,
மனுதாரின் சட்டத்தரணி.
5115

## தேவை

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் சகலவசதிகளுடன் கூடிய வீடு இருவருடங்களுக்கு மட்டும் வாடகைக்கு தேவை. விபரங்களுக்கு; 36, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 23493 5165

ராதிகா மூவிஸ் தயாரிக்கும் ''கண்ணீர் கோடுகள்'' வீடியோ படத்திற்கு நடிக, நடிகைகள் தேவை. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களுடன் புகைப்படப்பிரதியும் அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: டிங்கிரி கனகலிங்கம், 34, யாழ் வீதி, யாழ்ப்பாணம். 5112

யாழ். நகரப் பகுதிக்குள் அறை அல்லது சிறுவீடு காரியாலயப் பாவிப்பிற்கு வாடகைக்கு உடனடியாகத்தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 5150, C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 5150

யாழ். குடாநாட்டின் பல பாகங்களுக்கும் வானில் சென்று வியாபாரம் செய்வதற்கு அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதி தேவை. போதிய சிங்கள அறிவு அவசியம். காலை 9 மணிக்கு நேரில் வரவும். லாலா சோப் தொழிற்சாலை, அச்சுவேலி. 5148

## தவறிவிட்டது

12–11–82 பகல் தெல்லிப்பளைக்கும் காங்கேசன்துறைக்கு மிடையில் 29/1927 இலக்க மினி பஸ்ஸில்தாலிஒன்றுதவறிவிட்டது. இதை எண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைத்தால் அதன் பெறுமதிக்கு மேற்பட்ட சன்மானம் வழங்கப்படும். மா. சிவசுப்பிரமணியம் 169/6 அரசடி வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 5171

## வைத்தியம்

மனநோய், வலி, எக்ஸிமா, பாலுண்ணிகள். முகப்பருக்கள் எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். நேரில் அல்லது கடித மூலம் தொடர்புகொள்ளவும். டாக்டர் V. T சந்திரன் 218/5 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். 5159

## வெற்று பரல் விற்பனை

எமது சங்கத்தில் பாவித்த 45 கலன் கொள்ளக்கூடிய வெற்று பரல்கள்80 (எண்பது] விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் பார்வையிட்டு, ஒரு பரலின் விலையைக் குறிப்பிட்டு கடித இடது மேல் மூலையில் ''வெற்று பரல் விலை'' எனக்குறிப்பிட்டு 27–11–82 நண்பகல் 12–00 மணிக்கு முன்பதாக ''பொது முகாமையாளர், கரைச்சிதெற்கு ப. நோ கூ. சங்கம், கிளிநொச்சி'' என்னும் முகவரிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்
கரைச்சி தெற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.
5158

## ''இந்து சமயத்தில் சாதி அமைப்புக்கு இடமில்லை''

(மாவிட்டபுரம்)

''இன்றைய தொழில் நுட்ப யுகத்தில் சாதி வேறு பாட்டைப் பேசி சைவமக்களது ஒற்றுமையைக் குலைத்து குழப்பத்திற்கு வழி சமைக்கும் நிலைக்கு நாம் இடமளிக்கக்கூடாது

இன்றைய இளஞ்சந்ததியினர் இச்சாதி வேறுபாட்டை ஒழித்துக் கட்டி வேறுபாடுகளுக்கப்பாற்பட்ட ஒற்றுமையான சமுதாயத்தை கட்டி எழுப்ப வேண்டும்.''

இவ்வாறு ஏழாலை மயிலங்காடு ஸ்ரீமுருகன் நூல் நிலையத்தில் ''கல்வியும் சமயமும்'' என்னும் தலைப்பில் நடந்த கருத்தரங்கொன்றில் பேசிய ஏழாலை சைவசமய அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சி. சக்திகிரீவன் கூறினார்.

ஸ்ரீமுருகன் வித்தியாசாலை அதிபர் திரு. சி. சிவபாதம் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:–

நமது மத்தியில் நிலவும்சாதி வேறுபாடுகளால் தான் நம்மிடையே ஒற்றுமை குலைகிறது. இச்சாதி வேறுபாடுகள் மதமாற்றத்தை ஏற்படுத்தும் தீய சக்திகளுக்கு வாய்ப்பாகஅமைந்து விடுகிறது. அன்று நாவலர் பெருமான்மதமாற்றத்தை எதிர்த்து வந்ததைப் போல் நாமும் இதனை எதிர்த்து நிற்க வேண்டும்.

''சைவசமயத்தில் சாதி அமைப்புக்கு எள்ளளவும்இடம் கிடையாது. அந்தணர்கள் கூட குணத்தால் உயர்ந்தவர்களே தவிர குலத்தால் அல்ல. இதை நமது சைவ மக்கள் நன்குணர வேண்டும்'' என்றார். திரு. சி. சிவஞான சுந்தரமும் பேசினார்.

த. சண்முகராஜா
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்
கோண்டாவில்

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் காமால் ஒழுங்கையைச் சேர்ந்த முகம்மது மீரா லெப்பை மீரான் முகிதீனுடைய மரணசாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்

மரணமெய்தியவர்

முகம்மது ஆயிஷா மீரான் முகிதீன் மாவடி வீதி யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன ]
] இல.3697
நியாயாதிக்கம் ]

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கானது மேலேபெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரால் மேற்சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காகவும் அதன் மீதான தத்துவப்பத்திரங்கள் பெறுவதற்காகவும் தாக்கல் செய்யப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகிறார்கள்.

1982ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம்
தா. குலஞானம்
பதிவாளர்

தயாரித்தது
மனுதாரின் சட்டத்தரணி
ஒப்பம்
த. சண்முகராஜா
5099

## மட்டுப்படுத்தப்பட்ட மானிப்பாய் கோயில் பற்று ப. நோ. கூ. சங்கம்

## வெற்றிடங்கள்

மானிப்பாய் கோயில் பற்று ப. நோ. கூ. சங்க எல்லைக்குள் வதியும் தகுதியானோரிடம் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1982 கார்த்திகை 29ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் சங்கத்தில் விநியோகிக்கப்படும் பத்திரத்தில் பூரணப்படுத்தப்படல்வேண்டும். விண்ணப்பப்பத்திரங்களை ரூபா 1/– செலுத்தி காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### I. எழுதுநர்

சம்பள அளவுத் திட்டம் $\dfrac{-195 - 345}{10\times10 - 12.50\times4}$

தகைமை

கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் சாதாரண பிரிவில் 6 பாடங்களில் சித்தியும், இவற்றுள் வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம், அல்லது எண்கணிதத்திலும் தமிழ் பாஷையிலும் திறமைச் சித்தி பெற்றிருத்தல்வேண்டும்.

வயது– 18—40வரை

### II. காவற்காரர்

சம்பள அளவுத் திட்டம் $\dfrac{-180-285}{7.50\times14}$

தகைமைகள்

5ம் தரக் கல்வித் தகைமையும், உடல் நலமும்.
வயதெல்லை –35—55 வரை

தகைமைகளுக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப பொருத்தமான சம்பள அளவுத்திட்டத்தில் தகுந்த படியில் நியமிக்கப்படுவர். சம்பளத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

5153

தலைவர்

## மத்திய கிழக்கு நாடுகளில்

## வேலைவாய்ப்புகள்

1. லேபேர்ஸ் (Labours)
2. சாரதிகள்–பாரவாகனங்கள் (Heavy Vehicle Drivers):– 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.
3. லேபேர்ஸ் (Labourers)
4. லேபேர்ஸ் மேற்பார்வையாளர் (Labour Supervisor)
5, ஸ்ரோர் கீப்பர் (Store–Keeper)
6. டீசல் மெக்கானிக் (Dieseal Mechanic)

[3, 4, 5, 6இல் குறிக்கப்பட்ட வேலைகளுக்கு கட்டாயமாக ஆங்கில அறிவு வேண்டும்.]

7. எலெக்ரிசன் (Electrician) AC and DC
8. வாகன எலெக்ரிசன் (Vehicle Electrician)
9. வீட்டுப் பணியாளர் (House Boys)
10. வீட்டுப் பணிப் பெண்கள் (House Maids)

[7, 8, 9, 10இல் குறிக்கப்பட்ட வேலைகளுக்கு ஆங்கில அறிவுள்ளோர் விரும்பப்படுவர்.]

**ஆண்கள் மட்டும்:**

11. ரெலெக்ஸ் இயக்குனர் (Telex Operators)
12. தொலைபேசி இயக்குனர் (Telephone Operator)
13. ரைப்பிஸ்ற் (Typist)
14. சாரதியும் பணிப்பெண்ணும் (Driver and House Maid) —கணவன் மனைவியாக இருத்தல்வேண்டும்.

★ காலை 9–00 மணி தொடக்கம் மாலை 3–00 மணி வரை கீழ்க்குறிக்கப்பட்ட தஸ்தாவேஜுகளுடன் எமது காரியாலயத்திற்கு நேரில் வரவும்.

1. பாஸ்போட்
2. பாஸ்போட் பிரதிகள்—2
3. புகைப்படங்கள்—3
4. கல்விச் சான்றிதழ் பிரதி—2
5. தொழில் அனுபவ சான்றிதழ் பிரதி—2

சேயோன்
''திருத்தணிகை''
ஆனைக்கோட்டை

Labour Licence No. 15

முக்கிய கவனிப்பு: சப் ஏஜன்சிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5145

# "ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து சமாதானத்தை சோவியத் பிச்சை கேட்காது!"

## யூரி அந்ரபோ கருத்து

மாஸ்கோ நவ. 13.

"சோவியத் யூனியன் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து சமாதானத்தைப் பிச்சை கேட்காது. அவசியமேற்படின் ராணுவ பலம் கொண்டு அதனைப்பெற முயற்சிக்கும்".

இவ்வாறு சோவியத் ஆட்சிப்பீடத்தின் புதிய அதிபராகத் தெரிவாகியிருக்கும் திரு. யூரி அந்ரபோ தமது தெரிவையடுத்து வெளியிட்ட கருத்தில் தெரிவித்தார்

திரு. அந்ரபோவின் இக்கருத்து மேற்கத்திய அரசியல் வாதிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தலாமென அரசியல் அவதானிகள் ஊகம் தெரிவித்தனர்

திரு பிரஷ்நெவ்வின் மறைவையடுத்து நேற்றுமுன் தினம் புதிய பொதுச்செயலாளருக்கான தெரிவு இடம் பெற்றது. அப்போது திரு யூரி அந்ரபோ ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். 68 வயதான இவர் கே. ஜி. பி. என்றழைக்கப்படும் சோவியத் யூனியனின் சர்வதேச பொலிஸ் உளவு சேவையில் முன்னர் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. யூரி அந்ரபோ மேலும் தமது கருத்தில், தாம் தொடர்ந்தும் மறைந்த தலைவர் லியனிட் பிரஷ்நெவ்வின் கொள்கைகளின் அடிப்படையில் நடந்துகொள்ளப்போவதாகத் தெரிவித்தார். (கி)

## சந்தேகநபர்களுக்குறிமாண்ட்

[சாவகச்சேரி]

மாசார் கொலை வழக்குத் தொடர்பாக இராசையா தர்மகுலசிங்கம், அந்தோனிப்பிள்ளை செல்வம், கதிர்காமர் சபாரத்தினம், பொன்னையா இராசகுமார் ஆகியோர் சாவகச்சேரிப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில்வைக்கப் பட்டிருந்தார்கள்

கடந்த 27ம் திகதி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற கொலை, கொள்ளை சம்பவத்தின் போது பொலிஸ் கைதிக் கூண்டுக்குள் கொள்ளையர்கள் குண்டெறிந்து கைதிகளில்ஒருவராகியபொன்னையா இராசகுமார் இறந்தும், பூட்டு உடைபட்டதால் ஏனைய மூவரும் தப்பிச் சென்றதும் தெரிந்ததே.

தப்பிச்சென்ற சந்தேக நபர்களாகிய தர்மகுலசிங்கம், செல்வம், சபாரத்தினம் என்பவர்கள் தங்கள் சட்டத்தரணியான ஆர். ஸ்ரீசிவாய மூலம் சாவகச்சேரி நீதிமன்றத்தில் சரணடைந்தனர். சந்தேகநபர்களை நீதிபதி எம். எச். காரியப்பர் இந்த மாதம் 22 ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார், [க]

## "வளர்முகநாட்டுப் பொருளுக்கு சந்தை வேண்டும்"

### -சர்வதேச வர்த்தக சங்கத்தலைவர்

மாஸ்கோ, நவ. 15

சர்வதேச வர்த்தக கேந்திரத்தின் உயர் நிர்வாகியான திரு. ஜி. எம். எங்ப்ளொம், சோவியத் வர்த்தக, தொழில்துறை சேம்பரின் அழைப்பின் பேரில் சோவியத்யூனியனுக்கு விஜயம்செய்துள்ளார்.

சோவியத் வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்களுடனான ஒத்துழைப்பை விஸ்தரிப்பது குறித்து விவாதிப்பதே இந்த விஜயத்தின் பிரதான நோக்கமாக உள்ளது.

"சோவியத்யூனியனின் வர்த்தக தொழில்துறை சபையினதும் வெளிநாட்டு வர்த்தக அமைச்சினதும் அதிகாரிகள் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன்வைத்தனர். சர்வதேச வர்த்தகக் கேந்திரம் இவற்றை ஆராய்ந்து பூரணமாக ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன். அவற்றைச் செயல்படுத்துவதில் நாம் முயற்சிப்போம்" என்று திரு. எங்ப்லொம் தெரிவித்துள்ளார்.

முன்னரும் சோவியத் நிறுவனங்கள் சர்வதேச வர்த்தக கேந்திரத்துடன் தீவிரமாக ஒத்துழைத்துள்ளன. அஸ்ராட் வரைந்த செயல் திட்டத்தின் கீழ் சோவியத்யூனியனுக்கு வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளுக்கு மேலும் வசதியளிக்கப்பட்டது. சோவியத்யூனியனுக்கு வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளுக்கு மேலும் வசதியளிக்கப்பட்டது. சோவியத்யூனியன் எப்போதுமே வளர்முகநாடுகளின் நலன்கள்பால் அக்கறை செலுத்துகிறது. இன்று மேற்கு நாடுகளின் தற்பாதுகாப்பு என்ற கொள்கை வளர்முக நாடுகளைப் பெரிதும் பாதித்துள்ளது. இந் நாடுகளின் வெளிநாட்டுக்கடன் இன்று 50000 — 60000 கோடி டாலர்களைக் தாண்டிவிட்டது. எனவே அவற்றின் பொருட்களுக்கு சந்தைகளைக் காப்பது அவசியமாகிவிட்டது" என்றும் அவர் கூறினார்.

# நடைபாதை வியாபாரிகள் இடமாற்றம்: யாழ்.பொலிசாருக்கு மேயர் நன்றி கூறுகிறார்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரத்தில் நடைபாதை வியாபாரிகளால் பாதசாரிகளுக்கு ஏற்பட்டு வந்த கஷ்டததைநீக்குவதற்கு உதவி புரிந்ததற்காக யாழ். பொலிசாருக்கு யாழ். மாநகராட்சி மன்றத் தலைவர் திரு. இராஜா விசுவநாதன் பாராட்டுத்தெரிவித்தார். கடந்த சில தினங்களாக யாழ் பஸ் நிலையம், நவீன சந்தை வீதிகளில் நடைபாதை வியாபாரிகள் முற்றுகையிட்டதனால் பொதுமக்களும், வாகனப்போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்தன.

நடை பாதை வியாபாரிகள் திறந்த வெளியரங்கு, முனீஸ்வரன் வீதியில் ஒரு பகுதி, பண்ணைப்பகுதி, ஆஸ்பத்திரி வீதியில் ஒருபகுதி, ஆகிய இடங்களில் வியாபாரம் செய்ய ஒதுக்கப்பட்டுள்ளன.

இதற்கு உதவி செய்த யாழ் பொலிஸ் அதிபர், போக்குவரத்துப் பிரிவு இன்ஸ்பெக்டர் ஆகியோருக்கு தலைவர் நன்றி தெரிவித்தார், [மா]

## யாழ். நகரில் 11 கட்சிக்கூட்டம் டிச.15-ல்

(யாழ்ப்பாணம்)

சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராக பதினொரு எதிர்க்கட்சிகளின் பிரசாரக்கூட்டம் யாழ்ப்பாணத்தில் டிசம்பர் 15ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் எதிர்பிரசாரக் கூட்டம் இம்மாதம் 18ம் திகதி யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெறவுள்ளது.

சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவாக யாழ் திறந்தவெளி அரங்கில் இம்மாதம் 26ம்திகதி நடைபெறவிருக்கும் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராக நடைபெறும் பதினொரு எதிர்க் கட்சிகளின் பிரசாரக்கூட்டத்தில் தமிழக் காங்கிரஸ்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம், சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, மற்றும் கட்சிகளின் தலைவர்கள் உரைநிகழ்த்துவர். (மா)

## கிராமோதய சமாதானசபை

(புலோலி)

புலோலி கிழக்குப் பகுதி மக்களிடையே நடைபெறும் சிறு சச்சரவுகள் பிரச்சனைகளைத் தீர்த்துவைத்து கிராமிய ஒற்றுமையை மேம்படுத்து முகமாக புலோலி கிழங்கு கிராமோதய சபை ஏழுபேரைக் கொண்ட கிராமோதய சமாதன சபை ஒன்றைத் தெரிவு செய்துள்ளது.

கிராமோதய சபைத்தலைவர் திரு. கே. குமாரவேல் கிராம சேவை அலுவலர் திரு. தோமஸ் அன்ரனி, திரு. எஸ் மாணிக்கம், திரு. ஏ. என். எஸ் திருச்செல்வம், திருமதி கு. சூரியகுமாரி, திரு. வி. ஐயாத்துரை, திரு எம். தங்கவேலு ஆகிய எழுவரும் இக் கிராமோதய சமாதான சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

# "உலக அமைதிக்கு உழைப்பேன்"

## -புதிய சோவியத்தலைவர்

மாஸ்கோ, நவ. 15

பிரஷ்நெவ்வின் மறைவையடுத்து சோவியத்யூனியனின் வெளிநாட்டுக் கொள்கையில் தற்போது மாற்றமெதுவும் ஏற்படாதென்று மேற்கத்தைய அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை உலக அமைதிக்கும் சமானத்திற்குமாக உழைக்கப்போவதாக சோவியத்யூனியனின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ள திரு. யூரி அந்ரபோவ் தெரிவித்துள்ளார். [வெ]

# இஸ்ரேல்பிரதமரின் மனைவி காலமானர்

ஜெருசலம், நவ 15.

இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகினின் மனைவி எலியா பெகின் நேற்றுக்காலை காலமானர்.

அமெரிக்காவில் இஸ்ரேலியப் பிரதமர் திரு, பெகின் இருந்த சமயத்தில் தான் திருமதி பெகின் மரணமானர். நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த பெகின் மனைவி இறந்தபோது அமெரிக்காவில் இருந்த திரு. பெகின் தமது பயணத்தை ரத்துச் செய்துவிட்டு நாடு திரும்பினர்.

## 'சங்கமித்தா' நாடகத்திற்கு முதலிடம்

(யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற சங்கீத, நடன, நாடகப்போட்டியில், யாழ் வேம்படிமகளிர் கல்லூரி மாணவிகளின் 'சங்கமித்தா' வரலாற்று நாடகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

குழுநடனப் போட்டியிலும் இக்கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

# இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் தூதுக்குழு

லண்டன், நவ. 15

சக்தி முகாமைத்துவம், புதிய சக்தி தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் பிரபல்யம் பெற்ற உசாத்துணை நிறுவனக் குழு ஒன்று இலங்கை வந்துள்ளது. இது நவம்பர் 21 வரைதங்கியிருக்கும்.

லண்டனைச் சேர்ந்த கடோகன் கன்ஸல்டன்ஸ் என்ற இந்த நிறுவனத்தை அதன் சிரேஷ்ட பங்காளர் பிரையன் லொக் 1978ல் நிறுவினர். இவர் சக்தி, சக்தி துறையில் புதிய மாற்றங்கள் ஆகியன பற்றி எழுதியும் ஒலிபரபபியும் விரைவுரைகள் நடத்தியும் வருகிறார். இவர் பல அரசாங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் கைத்தொழில் துறையில் சக்தி ஆலோசகராக இருந்து வந்துள்ளார். பிரிட்டிஷ் பெற்றோலியம், ஐக்கிய ராஜ்ய அணுசக்தி அதிகாரசபை ஆகியவை இவரின் சேவையைப் பெற்ற நிறுவனங்களில் இரண்டாகும்.

அண்மையில் சீனுவுக்கும் வடகொரியாவுக்கும் சென்று சக்தி அபிவிருத்தி பற்றிப் பேச்சு நடத்திவிட்டுத் திரும்பியுள்ள லொக் லண்டனில் ஒரு பேட்டியில் கூறியிருப்பதாவது: "சக்தித்துறையில் பிரிட்டனுக்கு பெருமளவு நிபுணத்துவம் உண்டு. இலங்கைபோன்ற நாடுகளுக்கு உதவும் நிலையில் அது உள்ளது. இலங்கையில் இத்துறையில் உள்ள அபிவிருத்திப் பிரச்னைகளை நான் ஆராய்வேன். விவசாயக்கழிவுகளைப் பயன்படுத்தும் திட்டம் ஒன்றையும் அங்கு நான் ஆராயவிருக்கிறேன்".

பத்தொன்பது பேர் கொண்ட இந்த பிரிட்டிஷ் வர்த்தக தூதுக்குழுவின் விஜயம் பிரிட்டிஷ் தென்ஆசிய வர்த்தகசங்கம் ஒழுங்குசெய்தது. குழுவின் நிகழ்ச்சிநிரலை ஒழுங்குசெய்வதில் பிரிட்டிஷ் தூதராலயத்துடன் திட்டமிடல் அமைச்சும் அமைச்சும் வெளிநாட்டு முதலீடுகள் ஆலோசனைச் சபையும் ஒத்துழைத்துவருகின்றன.

## ரூ 40,000 செலவில் இளைப்பாற்று மண்டபம்

(புலோலி]

இன்பருட்டி மீனவர்களின் நன்மை கருதி சுமார் 40,000 ரூபா செலவில் மீனவர்கள் இளைப்பாற்று மண்டபமொன்று அமைக்கப் பட்டுள்ளது.

இம் மீனவர்கள் இளைபாற்று மண்டபத்தை அமைப்பதற்கென பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினம் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்

இன்பருட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் இம் மீனவர் இளைப்பாற்று மண்டப அமைப்புவேலைகளைப்பொறுப் பேற்று நிர்மாணித்துள்ளது.

## ரூபவாஹினியில் சிவாஜி படம்

[யாழ்ப்பாணம்]

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடித்த 'சத்தியம்' திரைபடம் நாளை இரவு 8-45 மணிக்கு ஒளிபரப்பாகும், கமலஹாசன், ஜெயசித்திராவும் இப்படத்தில் நடிக்கின்றனர்.

## மணிவாக்கு

''தரமான உணவும் தக்க சம்பளமும் பெறும் ஒரு ராணுவப்படையும், வேண்டிய அதிகாரமும் எனக்குத்தாருங்கள்; சொற்ப காலத்தில் இரண்டும் இரண்டும் மூன்றென்றும் தண்ணீர் குளிர்ந்ததும் நீராவியாகுமென்றும் மக்களை நம்பவைக்கும் தலைவனுவேன்''

— பேற்ரான்ட் ரசல்

# நமது நோக்கு

## பாரதூரமானது

இலங்கை அரசாங்கம் உத்தேசித்து நடத்தவிருக்கும் பொதுஜனவாக்கெடுப்புப்பற்றி சென்னை 'இந்து' பத்திரிகை தீட்டிய தலையங்கம் எங்கள் இன்றைய பிரசுரத்தில் தரப்படுகிறது.

உலகப் புகழ்பெற்ற இப்பத்திரிகை – The Madras Hindu ஜனுதிபதி ஜே. ஆ ஜெயவர்த்தனவின் ஆட்சியை ஆதரித்து எழுதிய தலையங்கங்கள் பல.

அவற்றில் ஒன்றையும் தவறவிடாமல் பிரசுரித்து வந்த கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று, இதனை இருட்டடித்ததின் ரகசியம் பகிரங்கம்.

''பொதுத்தேர்தலுக்குப் பதிலாக ஒரு பொதுஜன வாக்கெடுப்பு நடத்தும் செயல் ஜனநாயகத்திற்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்'' என்பதே ஆசிரியரின் கருத்தாகும். ஜனுதிபதியின் ஆணைக்குக் கட்டுப்பட்ட—தாமே தெரிந்தெடுத்த பாராளுமன்றம் இயங்குவதே அதன் தாற்பரியம்.

அரசியலமைப்பைத் திருத்தும் அதிகாரம் மிகப்பெரும்பான்மை கொண்ட பாராளுமன்றத்தில் என்றும் ஜனுதிபதிக்கு உண்டு. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தேர்தலில் மீண்டும் பதவிக்கு வந்த ஜனுதிபதி தமது கட்சியின் பலம் குறைந்ததைக்கண்டு பொதுத் தேர்தலைத்தவிர்க்க இந்த உபாயம் எடுத்திருப்பதாக அப்பத்திரிகை ஆசிரியர் குறிப்பிடுகின்றுர். ''இன்றுஇருக்கும் அமோக பலம் இன்னும் ஆறு ஆண்டுகளுக்குப் பாதுகாக்கப்படவேண்டுமென அவர் விரும்புவது பாரதூரமானது''

இலங்கை அரசியல் விவகாரங்களை நன்கு விமர்சிக்கும் 'இந்து' பத்திரிகை தமிழ் மக்கள் பிரச்னை சார்பாக எழுதுவதோ அல்லது ஜனுதிபதி ஜெயவர்த்தனவின் ஆட்சி பற்றி கண்டனம் தெரிவித்ததோ இதுவரை நாம் காணமுடியாத அனுபவம்

எனவே பொதுஜன வாக்கெடுப்பு பற்றி அப்பத்திரிகை வழங்கியிருக்கும் ஆழமான அரசியல் கருத்துக்கள் இங்குள்ள அரசியல் தலைவர்கள் நன்கு கவனிக்கவேண்டியவை.

சாதாரண வாக்காளருக்கு விளங்கமுடியாத தீர்க்க தரிசனம் இந்த அரசியல் நடவடிக்கையில் பொதிந்துள்ளதாக பத்திரிகை குறிப்பிடுகிறது.

வைத்திய நிபுணர் ஒருவர் நோயாளியின் மருந்து பற்றி நோயாளியின்விருப்பு வெறுப்பு வா... ப... தில்லை. நோயை விளக்கி இதுதான் மருந்தென்று அவருடைய நம்பிக்கையைப் பெறுவதே மருத்துவ தர்மம், அரசியல் தர்மம் அத்தன்மையதே! பொதுத் தேர்தல் தான் மருந்தென்பது விளக்கவேண்டியதில்லை.

## வெறும் பானை பொங்குமா?

கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு அடுத்து யாழ்ப்பாணம்; இவ்வாறு சொல்லியாழ். மாநகரத்தையோ, யாழ். பெரியாஸ்பத்திரியையோ பெருமைப்படுத்துவது வெறும்வாய் சப்புவதாக முடிகிறது. தீயணைக்கும்படை வந்துவிட்டதா என்று வாசகர்கள் கிண்டல் செய்ய இடமுண்டு.

சுமார் நான்கு லட்சம் ரூபா செலவில் அவசர சிகிச்சை நிலையம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. இது பொதுஸ்தாபனங்கள், கொடைவள்ளல்கள் மூலம் நிறைவேறியது பலருக்குத் தெரியாமலிருக்கலாம்; இவ்வித கட்டிடங்கள் திறப்பு விழாவிலே பொதுமக்கள் கவனத்துக்குவருகின்றன. ஆனால் இன்று முடிவடையும் அவசர சிகிச்சைநிலையம் ஒரு வெறும் கட்டிடம் அல்ல; அல்லதுதிறப்புவிழா நடத்தியபின்சில உபகரணங்களைச் சேகரித்துச் சேவை செய்யும் நிலையமும் அல்ல;

நான்கு லட்சம் கட்டிடச் செலவென்றால் அதற்கேற்ற உபகரணங்களுக்கு இரண்டு கோடி ரூபாவுக்கு மேல் தேவை.

அப்படியா? சாதாரண மக்களுக்கு இது ஒரு புதிராகவே இருக்கும்; ஆனால் சற்றே சிந்திக்கத்தொடங்கினால் எங்கள் சொந்த வீடுகளிலேயே, அவ்வீடுகளின் பெறுமதியின் பன்மடங்கு தொகை வீட்டுக்குள்—வங்கி வேறு விடயம்—இருப்பதால் ஆயுதம் தாங்கிய கொள்ளையர் அதனை நாடுவது எல்லோரும் புரியக்கூடிய உண்மை.

எனவே குறிப்பிட்ட பெரியாஸ்பத்திரி அவசர சிகிச்சை நிலையத்தின் உடம்பு கட்டிடமானல், உயிர் ஆபத்திலிருக்கும் உயிரைக் காப்பாற்றும் உயிர், அதன் உபகரணங்களிலும்; அவற்றை செயற்படுத்தும் திறமையுடைய மருத்துவ நிபுணர்களிலும், ஊழியர்களிலும் தங்கியிருக்கிறது.

சுருங்கச் சொல்லின், வெறும் பானை பொங்குமோ? ஆபத்தான நிலை வரும் நோயாளி கொழும்புசகு ஏற்றுமதிசெய்யும் பொருளா?

பானையை நாம் உவமானமாக எடுத்ததற்குக் காரணமுண்டு; தை பிறந்தால் வழிபிறக்குமென்ற நம்பிக்கை மாரிகாலத்தில் நோயால் தலியும் மக்களுக்குமட்டுமல்ல; மற்றெல்லோருக்கும் உண்டு.

எனவே பொங்கல் தினத்தை ஒரு சுபதினமாகக் கொண்டு இந்த அவசர சிகிச்சை நிலையம் இயங்க எல்லோரும் தங்கள் பணப்பையை நன்கு விரியத் திறந்து உதவ முன்வர வேண்டும்

# இன்பமுற்று இனிது வாழவைக்கும் கந்தசஷ்டி

தர்மத்தை நீ பாதுகாத்தால் அது உன்னைப் பாதுகாக்கும் – நீதர்மத்தை அழித்தால் அது உன்னை அழித்துவிடும் என்ற கருத்து மநுதர்ம சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. மூதாதையர்செய்துவந்த தர்மங்கள் பலவற்றை நாம் அலட்சியம் பண்ணிவிட்டோம் என்பதற்கு உள்ள உதாரணங்களில் கந்தசஷ்டி விரதமும் ஒன்றாகும். கந்தபுராணப் பயிற்சியும் முருகபக்தியும் மட்டுமன்றி கந்தசஷ்டிவிரதப் பயனாகப் பிள்ளைகள் பிறந்த தினுலுமே முருகப்பெருமானுடைய பெயருடையவர்கள் நம்நாட்டில் பலரானுர்கள். பலகுடும்பங்கள் சந்ததியற்றதாக நின்றுவிடாது வளர்வதற்குக் காரணமான கந்தசஷ்டி விரதத்தை அந்த அந்த குடும்பத்தில் வருபவர்கள் தொடர்ந்து அனுட்டித்து வருகிருர்களா? என்று கேட்டால் உடனடியாக திருப்தியான பதில் கூறமுடியாத நிலையே உள்ளது. நல்ல கல்வியாலும் நல்ல முயற்சியாலும் சிறப்படைந்த தந்தை தன் பிள்ளைகளையும் தன்வழியில் வாழவைத்தல்போல நல்ல முயற்சியையும் கல்வியையும் கைக்கொண்டும் தொடர்ந்தும் அதிகநலன்களை அடைவது போல் கந்தசஷ்டி விரதத்தாலும் அடையவேண்டும் என எண்ணுவது அன்றே மனிதப் பண்பு. உண்ணும் பயிரினும் பார்க்க அதிகபயிரை மிதித்து அழிக்கும் யானைபோல நம் விருத்திக்கு ஆதாரமாக இருந்த விரத அனுட்டானத்தை மறப்பதை பாதாபத்திற்கு உரிய அறிவீனமாகவே கருதவேண்டும்.

ஒருவன் வெளிநாட்டுக்குப் போய் ஆயிரக்கணக்கில் உழைத்துச் சம்பாதிக்கின்றுன் என்பதை கண்டதும் தாமும் அப்படி உழைக்கவேண்டும் வெளிநாட்டுக்குப் போகவேண்டும் என விரும்பிமுயலுவது போன்று முருகனருளால் சற்புத்திரபாக்கியமேயன்றிபணம் பதவி பண்பாடு ஆகிய நலன்களையும் பெறுவதைக்கண்டு நாமும் முருகனருளைப்பெற வேண்டும் என்று எண்ணவில்லையென்றால் எம் கதி என்ன?

இந்திரன் முதலிய தேவர்கள் மட்டுமன்றி, முசுகுந்தன் முதலிய புராணகால மனிதர் மட்டுமன்றி, குமரகுருபரர்–அருணகிரிநாதர்–சுக்கிரர்–ஆறுமுகநாவலர் – கிருபானந்தவாரியார் முதலிய பெரியோர்கள் மட்டுமன்றி. நம்மிடையே நம்மைப் போலவே ...மு... பலர், வாழந்தபலர் கந்தசஷ்டி விரதம் அனுட்டித்து முருகப்பெருமானை உள்ளன்போடு வணங்கி முருகனருளைப்பெற்று நல்வாழ்வு வாழ்வதைக்கண்டும் காணுதவர்போல் இருப்பது குருட்டுப்பண்பு அல்லவா. குருடன் காட்சியின்பத்தையும் முடவன் மலை ஏறும இன்பத்தையும் அவாவுவது போலவும் – பசியும் உணவும் இருக்கவும் உண்ண அலுப்புபட்டு வருந்துவது போலவும் கந்தசஷ்டி விரதம் அனுட்டிக்க வருந்தினுல் நன்மையடைய முடியுமா?

கண் காது மூக்கு முதலிய உறுப்புக்களால் அறிய முடியாத பிரமமாய்நின்ற சோதிப் பிழம்பாக உள்ள இறைவன் கருணைசார் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு முருகனுக அவதரித்ததோடு நின்று விடாமல் ஆறுபடை வீடுகளில் இருந்து அருள்வது என்றும் நிறுத்திவிடாமல் நல்லூரிலும் சந்நதியிலும் மருளாயிலும் மாவிட்டபுரத்திலும் ஊர்கள்தோறும் உள்ள ஆலயங்களிலும்

- அருளாளன் -

## கணேசையா நினைவுமன்றம்

(யாழ்ப்பாணம்)

வித்துவசிரோமணி சி. கணேசையாவின் நினைவுப் பணிமன்றம் தெல்லிப்பழையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

நினைவுப்பணிமன்றத்தின் அங்குரார்ப்பணம் வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்தில் பண்டிதர் இ. நமசிவாயம்தலைமையில் நடைபெற்றபோது, மன்றத்தின் நிர்வாகசபைக்கு பின்வருவோர் தெரிவுபெற்றனர்,

தலைவர் பண்டிதர் இ. நமசிவாயம், துணைத்தலைவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. விநாயகமூர்த்தி, பொதுச்செ சைவப்புலவர் அநு. வை. நாகராஜன், துணைச்செயலராளர் திரு. க. சிதம்பரநாதன், பொருளாளர்: திரு. வ. சின்னத்தம்பி, கௌரவ கணக்காய்வாளர் திரு. வ. செர்திவேற்பிள்ளை செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் ஏ. ரீ. பொன்னுத்துரை, த. சிவதாஸன், த. தர்மேஸ்வரா, பொ. குகதாஸன், க. தர்மநாயகம், சி. உதயகுமார் ஆகியோரும் தெரிவுபெற்றனர். (உ)

## பயிற்சிக் கருத்தரங்கு

(அச்சுவேலி)

கோப்பாய்த்தொகுதி மாதர் பணியக அங்கத்தவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சை சம்பந்தமான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று இன்று தொடக்கம் 20ம் திகதி வரை வலி கிழக்கு தென்பகுதி ப.நோ. கூ. சங்கத்தில் நடத்தப்படவுள்ளது. இப் பயிற்சிக் கருத்தரங்கில் அறுபதுக்கு மேற்பட்ட மகளிர் பணியக அங்கத்தவர்கள் கலந்துகொள்ளுவார்கள்.

இதற்கான ஏற்பாடுகளை கோப்பாய்த் தொகுதி மகளிர் பணியகச் செயலாளரும் அபிவிருத்தி அலுவலருமான திருமதி பத்மினி சிவலிங்கம் மேற்கொண்டுவருகிறார்.

9 விருத்திகரமான ஆயுட் திட்டங்கள்

வரும் 'இ...
பல ஆங்கில...
யில் நலை...
பொதுசன...
ஜனநாயக...
ஆபத்து எ...
டன் எழுதி...
தின் தமிழ...
படுகின்றது
திரு. ஜே...
தன சக...
பொருந்திய...
மிக்கப்போ...
கிறது: இ...
பதியாக அ...
செய்யப்பட்...
தேர்தல்

நாம் வண...
எழுந்தருளி...
இருக்கி...
திருமு...
பார்பே...
மேவி
அனைத்தை...
சிவகதி அ...

# இலங்கையில் ஜனநாயகத்துக்கு ஒரு பெரும் ஆபத்து

## இந்து பத்திரிகை தலையங்கம்

...யிலிருந்து வெளி ...இந்து' என்ற பிர ... தினசரி இலங்கை ...பெறவிருக்கும் ...ாக்கெடுப்புப்பற்றி ...துக்கு ஒரு பெரும ...ன்ற தலைப்புடன் ...புள்ள தலையங்கத் ...க்கம் இங்கே தரப்

...ஆர். ஜயவர்த் ... வல்லமைமளும் ...மனிதராகப்பரிண ...ருர் போல் தெரி ...ங்கையின் ஜனாதி ...ர் மீண்டும்தெரிவு ...தின் மூலம், ...டைமுறையைக்

கைவிட்டு இப்போதைய பாராளுமன்றத்தின் ஆயுளை மேலும் ஆறுவருடங்களுக்கு நீடித்துக்கொள்ளும் துணிவை அவர் பெற்றுள்ளார். பாராளுமன்றத்தில் 168பேரில் 143பேரைக் கொண்டு பெரும் பலத்துடன் ஐ. தே. கட்சி விளங்குவதனால் மேலும் 6 ஆண்டுகளுக்கு அரசின் தலைவராக நீடிக்கக்கூடியதாகமக்கள் ஆணையைப்பெறும் அரசியல் திட்ட திருத்தம் ஒன்றை சில வாரங்களுக்கு முன்மிக இலகுவாக நிறைவேற்றிக்கொள்ள முடிந்தது.

இந்த நடவடிக்கை மிகவும் சரியானதே என உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. கடந்த வாரம் நடந்த தேர்தலில் 53 வீத ஆதரவு வாக்குகளை அவரால்பெற முடிந்தது. ஆனால் அவர் எதிர்பார்த்தது போல் அபரிமிதமான வெற்றி என்று சொல்லிவிடமுடியாது. ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் பெற்ற வாக்குகளுடன் ஒப்பு நோக்குகையில் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் இத்தேர்தலில் பெற்றுள்ள வாக்குகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருப்பதானது அவருக்கு அதிர்ச்சியைக்கொடுத்துள்ளது.

கடந்த சில வருடங்களாகவே திரு. ஜயவர்த்தன ஐ.தே.க வின் பெரிய எதிரியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைக் கட்டுப்படுத்துவதற்காக தனது அதிகாரத்துக்குட்பட்ட சகலதையும் செய்துவந்துள்ளார்.

ஒரு ஜனாதிபதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சில பிரதிகூலமான கண்டுபிடிப்புக்களின்மீது திருமதி பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகள் ஆறு ஆண்டுகளுக்கு பாராளுமன்றத்தினால் பறிக்கப்பட்டுவிட்டது, இருந்தும் அதன் அபேட்சகரான திருமதி பண்டாரநாயக்கா நியமித்த திரு. ஹெக்டர் கொப்பேகடுவ குறிப்பிடத்தக்க வகையில் 39.07 விகித வாக்குகளைப்பெற முடிந்தது. 1977ம் ஆண்டு இருந்த நிலையில் ஐ. தே. கட்சி இல்லையென்பதையே இதுகாட்டுகிறது இத்தேர்தலில இன்னொரு முக்கிய அம்சம் என்னவென்றால் தமிழ் மாவட்டமான யாழ்ப்பாணத்தில் திரு. ஜயவர்த்தனவால் ஏதும் முன்னேற்றம் காண முடியவில்லை இதுதமிழ்பேசும் சிறுபான்மை மக்களின் நிலையை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்ட நடவடிக்கைகள் ஒன்றும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தவில்லை யென்பதைக் காட்டுகின்றது.

இந்த உண்மைகளையெல்லாம் கவனிக்கும்போது திரு ஜயவர்த்தன தமக்கு கிடைத்திருப்பதாகக்கருதும் அரசியல் அதிகாரத்தில் சந்தேகங்களைக் கிளப்புவதுடன், புதியபாராளுமன்றத்துக்கான தேர்தலை அவர் முற்றாக இல்லாமற்செய்வதானது நிலைமையைக் குழப்பிவிடுவதாகவுமுள்ளது அவருடைய யோசனையை உயர் நீதிமன்றமும் பாராளுமன்றமும் ஏற்றுக்கொண்ட –கடந்தகால சம்பவங்களைப்பார்த்தால் அவை ஏற்றுக்கொள்ளக்கூடும் பொதுசனவாக்கெடுப்பும் சாதகமாக அமையின் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் தானாகவே மேலும் ஆறுவருடங்களுக்கு நீடிக்கப்பட்டுவிடும். இன்றுள்ள அளவிலேயே எல்லா கட்சிகளுக்கும் பாராளுமன்றத்தில்பிரதிநிதித்துவம் இருக்கும்.

சுருக்கமாகச் சொல்வதானால் பொதுசன வாக்கெடுப்பில் ஒரு சாதாரண பெரும்பான்மைகாரணமாகக் கடந்த ஐந்து ஆண்டுகளாக அரசியல் துறையில் ஏற்பட்டுவந்துள்ள மாற்று நிலைமைகள் புதிய பாராளுமன்றத்தில் பிரதிபலிக்கமாட்டா ஐ. தே. கட்சி, ஆறில் ஐந்து பெரும்பான்மை கொண்டிருக்கும். பாராளுமன்றத்துக்குத் தனியான தேர்தல் வைக்கப்படுமானால் இவ்வளவு இடங்களை அது எதிர்பார்க்கமுடியாது. ஐ. தே கட்சியின் தலைவர் என்றமுறையில் திரு ஜெயவர்த்தன அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை நியமிப்பார். அவர்கள் தமது தொகுதிகளை எதிர்கொள்ளவேண்டிய அவசியமே இருக்காது. இவைகள் அனைத்தினதும் முடிவு என்னவாய் இருக்கும் என்பதை உணர்ந்துகொள்வது கஷ்டமில்லை ஐ. தே. கட்சியின் அபரிமிதமான பெரும்பான்மையோடு மேலும் ஆறு வருடங்களுக்குத் தனக்கு அடிமைப்பட்ட, கட்டளைகள் பிறப்பிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு பாராளுமன்றத்தைக் கொண்டவராக மேலும் திரு. ஜெயவர்த்தன விளங்குவார். இது இலங்கையின் ஜனநாயகநிறுவனங்களைபலவீனப்படுத்துவதாயும் கீழ்நிலைப்படுத்துவதாயும் அமையும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டவர்களில் ஒருவரான கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா 1978–ம் ஆண்டு வெளியிட்ட பின்வரும் கருத்து தீர்க்கதரிசனமானவை:–

'புதிய மாதிரியிலான ஜனாதிபதியானவர், பாராளுமன்றத்தை மிகவும் கீழானநிலைக்குத் தள்ளிவிட்டு அரச அதிகாரத்தின் உயர் சக்தியாக மாறிவிடுவார். ஜனாதிபதியின் மதிப்பு செங்குத்தாக உயர்ந்துவிடும். அதேசமயம் பாராளுமன்றத்தின் மதிப்பு படுமோசமாகத் தாழ்ந்துவிடும்.'


—பெ.

...கும் படியாக ... வெளிட்பட்டு ... முருகவேள் ...உய தூயவராகி ...ஏம் மூற்று இனிது ...வர்'ல் நினைந்த ... எய்தி ஈற்றில் ...வம்.

## ஜயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி ஸ்ரீபரமானந்தாவின் 31வது ஜயந்தி கொண்டாட்டங்களையொட்டி நாளை சுன்னுகத்தில் யாகம், குருபூஜை, உபன்யாசம் முதலியவற்றுக்கான மண்டபம் ஒன்றுதிறந்து வைக்கப்படுகிறது. காலை 7மணிமுதல் 11 மணிவரை நடைபெறும் இந்நிகழ்ச்சியைத்தொடர்ந்து பகல் போசனமும் மாலை 3 மணியிலிருந்து பஜனை, சமய உபன்யாசங்களும இடம்பெறும். மாலை 6மணியிலிருந்து நாதஸ்வர வித்துவான் எஸ். கே. பதுமநாதன் குழுவினரினதும் இசை நிகழ்ச்சி நடைபெறும்.



தேசிய வழியில் ஆயுள் காப்புறுதி செய்யுங்கள்

புதிய ஆயுட் திட்டங்கள் ■ சகாய தவணைக் கட்டணங்கள்

தேசியம்... காப்புறுதியில் ஒரு புதிய அனுபவம்

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

ஆயுட் காப்புறுதிப் பிரிவு

ஈ.எச்.குறே கட்டிடம், 411, காலி வீதி, கொழும்பு 3

தொலைபேசி: 548436.

Almeida Associates

வர்த்தக, கப்பற்றுறை அமைச்சு



பல லட்சரூபா செலவில் நவீன கல்வித் திட்டத்திற்கு அமைய திராவிட கட்டிடக் கலை அமைப்பை உள்ளடக்கிய வசாவிளான் மத்திய மகாவித்தியாலயப் புதிய கட்டிடத்தைத் திறந்து வைப்பதற்கு வருகைதந்த எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கத்தை வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. ஆ. இராமசாமி வரவேற்று அழைத்துச் செல்வதையும் கட்டிட ஒப்பந்தகாரர் திரு. வ. கணேசரத்தினத்தை எதிர்க்கட்சி முதல்வர் மலர்மாலை அணிவித்துப் பாராட்டுவதையும் படத்தில் காணலாம்.

# "தோட்டத்திலும் வீட்டிலும் ஒளித்து இருந்துவிட்டு சரணடைந்தேன்"

## வல்லை முக்கொலை வழக்கில் விளக்கமறியல் கைதி

(புலோலி)

"சம்பவ இடத்திலிருந்து நான் துரைசுவாமி தோட்டத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தபோது பின்னால் அப்புத்துரை ஓடிவருவதைக் கண்டேன், அப்புத்துரைக்குக் காயம் விளைவிக்கப்பட்டபோது சுமார் 100, 150 யார் தூரத்தில் அப்புத்துரையைக் கண்டேன். நான் துரைசுவாமியின் தோட்டத்தில் மூன்று நாட்கள் ஒளித்திருந்தேன். பின்னர் வீட்டில் மூன்று நாட்கள் ஒளித்திருந்தேன் பின்னர் வீட்டின் மூன்று நாட்கள் இருந்தபின்பே சிறைச்சாலையில் சரணடைந்தேன்."

இவ்வாறு, வல்லை முக்கொலை வழக்கில் சாட்சியமளித்த கொலையுண்ட விளக்கமறியல் கைதிகளுடன் கொண்டு வரப்பட்ட விளக்கமறியல் கைதியான இ. தங்கராசா எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஸ்ரீ சிவாயாவினால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது குறிப்பிட்டார்.

இந்த முக்கொலை வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. பி சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

பொலீசார் சார்பில் வல்வெட்டித்துறை பொலீசாருக்கு உதவியாகச் சட்டத்தரணிகளான என். கிருஷ்ணராசா, எஸ். சிவானந்தன் ஆகியோர் வழக்காளி தரப்பில் ஆஜராகி இருந்தனர்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான எம். வேலும்மயிலும், ஆர். ஸ்ரீசிவாயா, ஆர். டி. இரத்தினசிங்கம், எட்வேட் சந்திரன் ஆகியோரும் ஆஜராகி இருந்தனர். சாட்சி தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் குறிப்பிட்டதாவது:

சம்பவதினம் பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு யாழ். சிறைச்சாலையிலிருந்து பஸ்ஸில் என்னைக்கொண்டுவந்தபோது தேவராசாவுடன் இணைத்து எனக்குக் கைவிலங்கிடப்பட்டிருந்தது. இவ்வழக்கின் எதிரிகளின் சில நெருங்கிய உறவினர்களைக் கொலை செய்த குற்றச்சாட்டின்பேரில் நான் இம்மன்றில் வழக்கொன்றில் எதிரியாக இருக்கின்றேன்."

சம்பவதினம் யாழ். பஸ் நிலையத்தில் பஸ்சின் பின்பக்கத்தில் ஏறிய நாங்கள் வலது பக்கத்திலுள்ள ஆசனத்தில் அமர்ந்தோம். நான் பொலிசாருக்குத் கொடுத்த வாக்குமூலத்தில் தேவராசாவும் நானும் பஸ்ஸின் இடதுபக்கத்தில் இருந்துவந்தோம் என்று கூறியிருந்தாலும் அதுவும்சரி மகேந்திரனும் துரைராசாவும் பஸ்ஸில்இடதுபக்கத்தில் இருந்தார்கள் எனக்கூறியிருந்தால் அதுவும்சரி.

### கவனிக்கவில்லை

சம்பவதினம் யாழ். பஸ்நிலையத்தில் பஸ்ஸில் ஏறியபோது போது பஸ்ஸிற்குள் எத்தனை பிரயாணிகள் இருந்தார்கள் என்பதையோ, என்னுடன் வந்த மற்ற விளக்கமறியல் கைதிகள் எந்தெந்த ஆசனத்தில் இருந்தார்கள் என்பதையோ நான் கவனிக்கவில்லை.

நான் இருந்த ஆசனத்திற்கு முன்னால் தில்லை நடராசாவும் அப்புத்துரையும் இருந்ததைக் கண்டேன். ஆனால் குறிப்பாக எந்த ஆசனத்தில் இருந்தார்கள் என்று கூறமுடியாது. நான் இருந் ஆசனத்தின் முன் இருந்தஆசனத்தில் மகேந்திரனும்துரைராசாவும் இருந்ததை நான் கவனிக்கவில்லை.

### பொய்

யாழ். பஸ் நிலையத்தில் பஸ்ஸில் ஏறியபோது மகேந்திரனும் துரைராசாவும் நான் இருந்த ஆசனத்தின் இரண்டு மூன்று ஆசனங்களுக்கு அப்பால் இருந்தார்கள் என்று கூறியிருந்தால் அது பொய் யாழ் பஸ்நிலையத்தில் நான் பஸ்ஸில் ஏறிய ஆசனத்தில் இருந்தபோது நான் இருந்த ஆசனத்திற்கு முன் இருந்த ஆசனமொன்றில் அப்புத்துரையும், தில்லைநடராசாவும் இருந்ததைக் கண்டேன், நான் இருந்த ஆசனத்திற்குப்பக்கத்திலுள்ள இடைவெளிக்கு அப்பால் உள்ள வலதுபக்க ஆசனத்தில்தான் அவர்கள் இருந்தார்கள். பஸ்ஸின் இடதுபக்க ஆசனத்தில் கைதிகள் இருந்ததை நான் காணவில்லை

நான் பொலிஸிற்கு வாக்குமூலம் கொடுத்தபோது சம்பவம் நடந்த இடத்தைப்பற்றியே கூறினேன். யாழ். பஸ் நிலையத்தைப்பற்றி வாக்குமூலம் கொடுக்கவில்லை. நாங்கள் யாழ் பஸ் நிலையத்தில் பஸ்ஸில் ஏறியபோது நானும் தேவராசாவும் இடதுபக்க ஆசனத்தில் அமர்ந்திருந்தோம் எனப் பொலிசாருக்குக் கூறினால் அது பிழை.

யாழ். பஸ் நிலையத்தில் நாங்கள் பஸ்ஸில் ஏறியவுடன் எங்களுடன் வந்த சிறை உத்தியோகத்தர்களில் ஒருவர் நான் இருந்த ஆசனத்திற்குப் பின்னும் மற்றவர் பஸ்ஸின் மற்றப்பக்கத்தில் பின்பக்கமாகவும் அமர்ந்திருந்தார்கள். பஸ்ஸில் நானிருந்த பக்கத்திற்கு அடுத்த பக்கத்தில் பின்பக்கத்திலிருந்து எங்களுடன் வந்த சிறைக்கைதிகள் யார் யார் இருந்தார்களெனக் கவனிக்கவில்லை.

யாழ். பஸ் நிலையத்தில் நாங்கள் பஸ்ஸில் ஏறி இருந்தபின் பஸ் அவ்விடத்தை விட்டுப் படும்வரை நாங்கள் இருந்த இடத்தைவிட்டு மாறவில்லை. அந்தப் பஸ்ஸில் பிரயாணம் செய்தபோது ஒரு இடத்தில் நாங்கள் இருந்த இடத்தை விட்டுமாறியிருந்தோம். நாங்கள் மாறியிருந்த பஸ் அச்சுவேலிக்குவரமுன்போ அல்லது சம்பவம் நடந்த இடத்திற்கு வரமுன்போ என்று என்னால் சொல்லமுடியாது.

### இடம் மாறியதும்...

நாங்கள் இடம் மாறியது சிறியன், வெள்ளையன் ஆகியோரைக் கண்டதன் பின்பா, முன்பா என்பது எனக்கு ஞாபகமில்லை. ஆனால் சிறியன் வெள்ளையன் ஆகியோரை அச்சுவேலி பஸ் நிலையத்தில் கண்டதாக ஞாபகமுண்டு. அவர்களைக்கண்டபோது பஸ்ஸில் நான் எந்தப் பக்கத்திலிருந்தேன் என்பது ஞாபகமில்லை.

பஸ்ஸில் நான் இடம்மாறியிருந்தேன் என்று எனக்குத் தெரியும். எந்த இடத்தில் பஸ் வந்து கொண்டிருந்தபோது அப்படி இடம் மாறினேன் என்று என்னால் சொல்லமுடியாது. பஸ் சம்பவ இடத்திற்குவர முன்னரேயே நான் இடம்மாறினேன். நான் பஸ்ஸில் இடம்மாறியபடியால் என்னுடன் சேர்த்து இணைக்கப்பட்டிருந்த மற்றக் கைதியும் கட்டாயம் இடம்மாறியிருக்கவேண்டும்.

பஸ் ஆசனங்கள் எல்லாவற்றிலும் பிரயாணிகள் இருந்து ஏனையோர் இருபக்க ஆசனங்களின் இடைவெளியிலும் நின்றுகொண்டிருந்தபோதே நாங்கள் ஆசனம்மாறியிருந்தோம். எங்களுக்கு முன்னால் இருந்த ஆசனத்தில் விளக்கமறியல் கைதிகள் இருந்தது பற்றி நான் கவனிக்கவில்லை. எனக்குப்பின்னால் இருந்த ஆசனத்திலும் விளக்கமறியல் கைதிகள் இருந்ததை நான் கவனிக்கவில்லை.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து நான் மேற்குப்பக்கமாக பிரதான வீதி வழியாக ஓடி பிரதான வீதியில் அச்சுவேலிக்கும் தொண்டமானாற்றுக்கும் பிரியும் பாதை வருமுன் அதற்கிடையில் ஒரு பாதையால் வடமேற்கு மூலையால் ஓடினேன்.

### ஓடினேன்

சம்பவம் நடந்த இடத்திலிருந்து நான் வடமேற்கு மூலையாக எவ்வளவு தூரம் எவ்வளவு நேரம் ஓடியிருப்பேன் என்று என்னால் சொல்லமுடியாது நான் ஓடும்போது திரும்பிப்பார்த்துப் பார்த்துத்தான் ஓடினேன்.

# செல்வா நினைவாலயம்: இன்று மரம்நாட்டுவிழா

[யாழ்ப்பாணம்]

தந்தை செல்வா நினைவாலயத்தையும் அதன் சுற்றாடலையும் அழகுபடுத்தும்பொருட்டு இன்று காலை 8-30 மணிக்கு மரம் நாட்டும் வைபவம் நடைபெறவுள்ளது.


இங்கு நிகழ்ச்சிகளின்போது தந்தை செல்வா அறங்காவல் குழுவினர், மாநகரமுதல்வர், உறுப்பினர்கள், பாராளுமன்ற அங்கத்தினர்கள் அரசாங்க அதிபர், தொழிலதிபர்கள் ஆகியோர்கள் சம்பிரதாய பூர்வமாகமரக்கன்றுகளை நாட்டிவைக்கவுள்ளனர்.

நினைவாலய எல்லையில் இருந்து கே. கே எஸ். வீதி தொடக்கம் முனீஸ்வரன் ஆலய சந்திவரையும் திறந்த வெளியரங்கு வீதி, மணிக்கூட்டுக் கோபுரச் சந்திவரையும், வீதிகளில் இருமருங்கும், இம் மரக்கன்றுகள் நாட்டப்படவுள்ளன.

இந்த நிகழ்ச்சியின்போது, யாழ்ப்பாணக் கிராமோதய சபை உறுப்பினர்களும், அறவழிப் போராட்டக்குழு இயக்குநர்களும் பங்கு கொள்ளவுள்ளனர்.

தந்தை செல்வா அறங்காவல் குழுத்தலைவர், பேராசிரியர் கு. நேசையா இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (மா)

# யாழ். ஆயுள்வேத டாக்டர் சவூதியில் பதவியேற்பு



யாழ். கொழும்புத்துறையைச் சேர்ந்த டாக்டர் கந்தப்பு மருதநயினார் சவுதி அரேபியாவில் பதவி பெற்றுச் சென்றுள்ளார். அங்குள்ள ஆக்கிரேடன் என்ற நிறுவனத்தில் இவர் டாக்டராகப் பதவி ஏற்றுள்ளார்.

கொழும்பு சுதேச வைத்தியக் கல்லூரியின் சிறப்புப்பட்டதாரியாக 1967ல் வெளியேறி யாழ். நகரில் தனிப்பட்ட வைத்தியசேவையாற்றி வந்தசமயம் பல நோய்களுக்கான ஆங்கில, ஆயுள்வேத மருந்துகளின் தொழிற்பாடுபற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்து பண்டாரநாயக்கா ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையத்தினரின் பாராட்டை 71ம் ஆண்டு பெற்றார். தொய்வு நோய்க்கான இவரது ஆராய்ச்சி அறிக்கை ஆயுள்வேதத் திணைக்களத்தின் வெளியீடான 'ஆயுள்வேதபிரதீபா' உட்படப் பல பத்திரிகைகளிலும் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. இவரது ஏராளமான வைத்தியக் கட்டுரைகள் 'ஈழநாடு' இதழில் வெளிவந்துள்ளன.

1973ல் இவர் ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளை முகாமையாளராகப் பணிபுரிந்து 1979ல் அப் பதவியைத்துறந்த மேல்நாட்டு வைத்தியம் பயிலுவதற்காக இங்கிலாந்து சென்றார். அங்கு தேசிய தாவர வைத்தியக் கழகத்தின் இருவருடங்கள் பயின்று கடந்த ஆண்டு நாடு திரும்பிய இவரை யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை தனது சுகாதாரக் குழுவிற்கு நிபுணத்துவ ஆலோசகர்களில்ஒருவராக நியமித்தது.

நெடுந்தீவு கந்தப்பு மரகதம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரான இவர், நெடுந்தீவு மகாவித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிகளில் தமது கல்வியைப் பெற்றார்.

# பனம்பொருள் சித்திரக் கைப்பணி நிலையம்

[புலோலி]

இலங்கைப் பனம்பொருள் அபிவிருத்திச் சபை 'பனம்பொருள் சித்திரக் கைப்பணி நிலைய'மொன்றை ஆரம்பிக்கவுள்ளது.

பனம் பொருள் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்குமுகவும், நவீனமுறையிலான பனம்பொருள் உற்பத்திகளை மேற்கொள்ளும் முகமாகவுமே இப்பனம் பொருள் சித்திரக் கைப்பணி நிலையம் ஆரம்பிக்கப்படுகின்றது.

அரியாலையில் பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்திலே பிரதேச அபிவிருத்தி அமைச்சுச்செயலாளர் திரு எம். இராமலிங்கம் இப் பனம் பொருள் சித்திரக் கைப்பணி நிலையத்தைத் திறந்துவைப்பார்.

பனைமட்டை, ஊமல், டன்னை, பாளைபோன்றனவற்றையும், கழிவுப்பொருட்களையும் பயன்படுத்தி தச்சு வேலைகளையும் அழகுசாதனப் பொருட்கள் உற்பத்திகளையும் இச்சித்திரக் கைப்பணி நிலையம் மேற்கொள்ளும்.

# ஊழியர் சேமலாபநிதி பாஸ்புத்தகங்கள்

(கொழும்பு)

ஊழியர் சேமலாபநிதி ஊழியர்களுக்கு பாஸ்புத்தகங்களை மாவட்ட ரீதியாக தொழில் திணைக்களம் வழங்கி வருகிறது.

இந்த பாஸ் புத்தகங்களில் ஊழியர்களின் கொடுப்பனவுகள் அவற்றிற்கான வட்டி விகிதங்கள் ஆகியன குறிக்கப்பட்டிருக்கும்

வேலை கொள்வோர் ஊழியர் சேமலாபநிதிக்கு பணம் செலுத்தாவிட்டால் அதனைக் கண்டுபிடிக்கவும் இந்த பாஸ் புத்தகங்கள் உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# முதலாம்பிரிவில் மகாஜனா வெற்றி

(அரியாலை)

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிக்கும், யாழ். பரியோவான் கல்லூரிக்கு மிடையே நடைபெற்ற முதலாம் பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி 2: 1 என்ற கோல்களால வெற்றியீட்டியது.

இரண்டாம் பிரிவுக்கான போட்டியில் 4: 0 என்ற கோல்களாலும் மூன்றும் பிரிவுக்கான போட்டியில் 5: 1 என்ற கோல்களாலும் பரியோவான் கல்லூரிக் கோஷ்டிகள் வெற்றி பெற்றன.

# திருக்கேதீஸ்வரத்துக்கு மகாபலிபுரத்தில் உருவாகும் கற்தூண்

[திருக்கேதீஸ்வரம்]

திருக்கேதீஸ்வரம் ஆலய மண்டபத்திற்கு அமைப்பதற்கென 15 லட்சம் ரூபா செலவில் 80 கற்தூண்கள் மகாபலிபுரத்தில் செதுக்கப்பட்டு வருகின்றன.

திருப்பதி தேவஸ்தானம் இத் தூண்களுக்கான செலவைப் பொறுப்பேற்றுள்ளது.

சம்பந்தர், சுந்தரர், நாவலர், மண்டோதரி, குதிரை, யாழி ஆகிய சிற்பங்களுடனான 10 ஒட்டணித் தூண்களும் ஆலயத்தின் மகா மண்டபத்தில் நிறுவப்பட இருக்கின்றன.

ஏனைய 70 சாதாரண தூண்களும் ஏனைய மண்டபங்களிலும் நிறுவப்பட இருக்கின்றன. இத் தூண்கள் இன்னும் ஒரு வருடகாலத்தில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு ஆலயத்தில் நிறுவப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## அறுதிப் பெரும்பான்மை இல்லை

புதுடில்லி, நவ. 13


நாகலாந்து சட்டப் பேரவைத் தேர்தலில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை.

இத்தேர்தலில் இந்திரா காங்கிரஸுக்கு 23 இடங்களும், நாகலாந்து தேசிய ஜனநாயக கட்சிக்கு 24 இடங்களும், சுயேச்சைகளுக்கு 12 இடங்களும் கிடைத்துள்ளன. (வெ)

## இடமாற்றம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உப யாழ். மாவட்டசபை அலுவலகத்தில் கடமையாற்றும் திரு. சி. வ சங்கரப்பிள்ளை வரி வசூலித்தல் உத்தியோகத்தராகப் பதவி உயர்வுடன் மன்னார் அபிவிருத்திச்சபையின் நானாட்டான் உப அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இவர் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவருமாவார்.



இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் சர்வதேச ரீதியாக இணைந்துள்ள சர்வதேச சுதந்திர ஆசிரிய சங்க சம்மேளனத்தின் ஆசியப் பிரதிநிதி குர்ணாம்சிங், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபொழுது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா திரு. குர்ணாம்சிங்கின் வருகையைக் கௌரவிக்குமுகமாக அளித்த இராப்போசன விருந்தில் திரு. குர்ணாம்சிங், திரு. டி. எஸ். கே. வணசிங்கா, யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை ஆகியோர் காணப்படுகிறார்கள்.

# வடமராட்சி கிழக்கு அபிவிருத்திக்கு கூடுதல் நிதியுதவி

(புலோலி)

"யாழ். மாவட்டத்திலேயே மிகப் பின்தங்கியுள்ள வடமராட்சி கிழக்குப்பகுதி அபிவிருத்தியடைய வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டே பருத்தித்துறைத் தொகுதிக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தில் வடமராட்சி கிழக்குப்பகுதி அபிவிருத்திக்கென கூடுதலான நிதியை ஒதுக்கீடுசெய்கின்றேன். எனினும் பொருளாதாரச்சிக்கல் உள்ள இக்காலத்தில் எதிர்பார்க்கும் அபிவிருத்திகளை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பது மிகக் கவலைக்குரியதாகும்."

இவ்வாறு நாகர்கோவில் சனசமூக நிலையத்திற்குச் சுமார் 25,000 ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்து உரையாற்றிய பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் குறிப்பிட்டார். திரு. கே. நாகமுத்து தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிலே தொடர்ந்து உரையாற்றிய எம். பி. திரு. துரைரத்தினம் குறிப்பிட்டதாவது:

"வடமராட்சி கிழக்குப்பகுதி முற்காலத்தில் பல முக்கியம் வாய்ந்த பெரியார்களை எமக்கு உருவாக்கித் தந்த பகுதி. இப் பகுதி சிலகாலங்களாக அபிவிருத்தியின்றி இருந்தபோதும் தற்போது அபிவிருத்தியடைந்து வருவது மகிழ்ச்சிக்குரியது. நாம் அபிவிருத்தி கருதி எவ்வளவு சிறப்பாக இயங்கினாலும், தற்போதைய பொருளாதாரநிலை நாம் எதிர்பார்க்கும் அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்ளத் தடையாக இருக்கின்றது.

"மக்களுக்கு என்னாலான உதவிகளை வழங்குவதும் எமது பகுதிகளின் அபிவிருத்திகளை மேம்படுத்துவதுமே எமது நோக்கமாகும்".

நாகர்கோவில் கிராமசேவை அலுவலர் திரு. எஸ். சிவலிங்கம் உரையாற்றுகையில், கிராமப்பகுதி மக்களின் கல்வியறிவு மேம்படுத்தப்படும் போதுதான் கிராமப்பகுதிகளின் அபிவிருத்தி மேம்பாட்டையும். இதற்குப் பாடசாலைகள் மாத்திரமன்றி, சனசமூகநிலையங்கள் போன்ற பொதுநிறுவனங்களும் பங்காற்றமுடியும். இதனைக் கருத்தில்கொண்டு இச் சனசமூகநிலையமும் சிறப்பாக இயங்கவேண்டும்" என்றார்.

## மகாபொல புலமைப் பரிசில்கள்

(அரியாலை)

யாழ். பரி யோவான் கல்லூரியிலிருந்து 1982ம் ஆண்டில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற ஐந்து மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் கிடைத்துள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட என். சவுந்தயன், என். எம் ஜெயபாலன், என். சிவசக்திவேல் யாழ். பல்கலைக்கழகத்தில் வர்த்தக பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட ரி. சர்வேந்திரா, ரி. லங்கேஸ்வரன் ஆகியோர்களே மகாபொல புலமைப்பரிசில் பெறத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களாவர்.

இம்மாதம் 17ந் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும் வைபவத்தில் ஜனாதிபதியால் இவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்கப்படவிருக்கிறது.

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 30-ம் திகதி

செவ்வாய்க்கிழமை

(16—11—82)

மேடம்: சிறிய விடயம்கூட இன்று சிரமமாகத் தோன்றும் உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும் வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும் திருப்தியற்ற தினம்.

இடபம்; குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும். இசைத்துறையில் இன்று ஆர்வம் ஏற்படும் பிள்ளைகளினால் பெருமைக்கு இடம் உண்டு சிறப்பான தினம்.

மிதுனம்: எதிர்பாராத திசையில் இருந்து ஆபத்து உருவாகும் உள்வீட்டிலேயே சிறிய பூசல்கள் தோன்றக்கூடும் இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்.

கடகம்: உங்கள் நடவடிக்கையில் தனிச்சிறப்புத்தென்படும். பெரியவர் ஒருவர் உங்களுக்குக் கைகொடுத்து உதவுவார்கள் பிதாவழித் தனமும் சேரும்.

சிங்கம்: தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும் மேலதிகாரிகளின் பாராட்டிற்கு இலக்காவீர்கள் சிலர் வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம்.

கன்னி: பணம் தேடும் படலத்தில் வெற்றிக்கு இடமுண்டு பாவையர்கள் சிநேகமும் கிடைக்கலாம் பெண்களாயின் மனக் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளவேண்டும் கண்காணிப்புப் பலமாக இருக்கும்.

துலாம்: துன்பத்தின் ரேகைகள் படரும் எதிலும் தயக்கம் ஏற்படும் ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக்கூடும் கடன் தொல்லை அதிகரிக்கலாம் நிதானம் வேண்டும்.

விருட்சிகம்: எவ்விடத்திலும் நன்றாக ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும் முகமன் கூறுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்.

தனு: பேச்சுவன்மையினால் பெரும் புகழ் கிடைக்கும். பெரிய இடத்துச் சகவாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித்தரும் வரவிலும் உயர்வு காணும் சிலருக்கு அதிர்ஷ்ட லாபமும் கிடைக்கும்.

மகரம்; எதிர்பாராத மூலையிலிருந்து ஆபத்து உருவாகும் இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும் தெய்வவழிபாடு விரும்பத்தக்கது.

கும்பம்: கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள் கல்வித்துறையில் வித்துவத் தன்மை தென்படும். வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவர் சுப தினம்.

மீனம்: இதயத்தில் இனிமை துள்ளும் பகைவர்கள் பணிவர் வணிகர்களுக்கு வியாபார விருத்தி உண்டு. பரந்த நோக்குடன் செயற்படுவதன் மூலம் பொதுமக்களின் பாராட்டும் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

16-11.82—17-11-82
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-45, 7-30, 9-15
BILLION DOLLAR THREAT

மனோகரா யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(வயதுவந்தவர்க்கு)

ராஜா யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்–காஞ்சனா
காதலிக்க நேரமில்லை
(புதிய பிரதி) (கலர்)

றீகல் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்–ஜெயலலிதா
அசோகன்–நாகேஷ்
நான் (ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நவரத்தினம்
வண்ணப்படம்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

கடைசி வாரம்
லிடோ [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
லவகுசா

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 4-30, 7-00, 9-30 சனி, ஞாயிறு 2-00
THE ARENA

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

WINDSOR (Jaffna) Daily 5 Shows
'RISE AND FALL OF IDI AMIN'
Murder, Rape and Torture — More than 500,000 people brutally murdered during IDI AMIN'S Rule———
கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்———
உகண்டா ஜனாதிபதி இடி அமினின் எழுச்சியும் வீழ்ச்சியும்--

# "தமிழ் மக்கள் ஒன்றுபடும்போது 'தமிழ் ஈழம் உதயமாகும்'"

## தமிழர் கூட்டணிக் கருத்தரங்கில் 'அமிர்'

(வவுனியா நிருபரி ரி, விவோராசா)

சிங்கள கட்சிக்கு வாக்கு அளிப்பதை விட்டு தமிழ்மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து 'தமிழ் ஈழமே' எமது இலட்சியம் என உணர்ந்து, கட்டுக்கோப்புடன் எப்போது உழைக்கிறார்களோ, அப்போதுதான் தமிழ்ஈழம் உதயமாகும். இலங்கை ஒரு தீவாகயிருந்தாலும் இருதேசிய இனங்கள் வாழும் இந்த நாட்டை வெள்ளையர்கள் விட்டுச்சென்றபோது ஒரு பாதகமான சூழ்நிலையில் ஏற்படுத்தி விட்டுசென்றுள்ளனர்.''

எதிர்கட்சித்தலைவரும், தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகமுமாகிய திரு. அ. அமிர்தலிங்கம் வவுனியாவில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிரான கூட்டணிக் கருத்தரங்கில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்குக்கு வவுனியா எம். பி திரு தா சிவசிதம்பரம் தலைமைவகித்தார்.

திரு அமிர்தலிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

"இன்று இலங்கை அரசியலில் ஒரு மிகவும் சிக்கலான திருப்புமுனை ஏற்பட்டுள்ளது. முதலில் அடிப்படை உண்மைகளை சிறபபான முறையில் புரிந்துகொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். இலங்கை ஒரு தீவாகயிருந்தாலும் இரு தேசிய இனங்கள் வாழுகின்றன. எண்ணிக்கை கூடிய சிங்கள இனம் ஆளும் இனமாகவும்எண்ணிக்கைகுறைந்த தமிழ்மக்கள் ஆளப்படும் இனமாகவும் இந்த நாட்டை வெள்ளையர்கள் ஆக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

### சிங்களக்கட்சியும் ஒரே குறிக்கோள்

1948முதல் இன்று 34 ஆண்டு காலமாக இந்தநாட்டை மாறி மாறி ஆட்சிபுரிந்த சிங்கள கட்சிகள் ஒரே ஒரு குறிக்கோளை கொண்டே ஆட்சி செய்து வந்துள்ளன, இந்த நாட்டின் அரசியல் அதிகாரத்தைப் கைப்பற்றி ஆளவேண்டும் என்பதே இக்கட்சிகளின் நோக்கமாகயிருந்துள்ளது.

''இந்போது ஒருமாற்றமான நிலை ஏற்பட்டுள்ளது. அது முன்னைய அரசு 5 வருடமாகயிருந்த ஆட்சிபலத்தை 7 வருடமாக நீடித்தது.''

''ஆனல் இன்று 6 வருடமாக இருந்த ஆட்சி அதிகாரம் இன்றைய அரசினல் சர்வஜன வாக்கெடுப்பு என்ற போர்வையில் 12 வருடமாக ஆட்சியை நீடிக்க முனைகின்றது.''

''முன்னைய ஆட்சி நீடிப்பிற்கும் இப்போதைய ஆட்சி நீடிப்பிற்கும் அடிப்படைவித்தியாசம் 1978-ல் இருந்த அரசியல் அமைப்பு வேறு. 1978க்கு பிறகு வேறு நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனதிபதி ஜனநாயக அமைப்பை ஏற்படுத்த முனைகின்றார்கள்.

இன்று அரசாங்க எம்.பி. கள் அனைவரினதும் ராஜினமா கடிதங்களை ஜனதிபதி பெற்றுள்ளார்:சர்வஜனவாக்கெடுப்பில் வெற்றி பெற்றால் ஜனதிபதி தனக்கு இசையக்கூடிய எம். பிக்களை தெரிவு செய்யும் பலம்பொருந்திய பாராளுமன்ற தெரிவை நடாத்த முயற்சிக்கிறது.

''ஜனநாயக அடிப்படை உரிமைகளை ஒழித்து நிற்கின்ற நாம் இப்போது இருக்கும் அரைகுறை உரிமைகளையும் இழந்து நிற்கவேண்டிய நிலைவரக்கூடாது. என்பதற்காகவே சர்வஜன வாக்கெடுப்பை எதிர்க்கவேண்டியுள்ளது.

''இதனைகூடுதலாக எதிர்க்க வேண்டியவர்கள் சிங்கள மக்களே ஆனல் இவர்கள் மத்தியில் உள்ள அரசியல் கட்சிகள் இன்று சிதறிக்கிடக்கின்றது.''

கள்ளக்கூப்பன் கொடுத்தது சதி செய்வது என்று கூறி பல அரசியல் பிரமுகர்கள் விசாரிக்கப்படுகின்றனர். சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜனதிபதிதேர்தலின் பின் சிதறி காணப்படுகின்றது. இக்கட்சியில் உள்ள பலருக்கு இன்றைய அரசினல் ஆசை காட்டப்பட்டு ஐ தே. கட்சியில் சேர்க்கப்டுள்ளனர்.

### ஒதுக்கியதற்கு காரணம்

அரசியல் உரிமை இல்லாது இக்கட்சி தலைவி உள்ளார்,முற்ருக பலவீனம் செய்ய உபாயங்கள் நடக்கின்றது.

ஜனதிபதி தேர்தலில் நாம் அனைவரும் ஒரு தமிழ்மகனை நிறுத்திஆதரித்தாலும் வெற்றி பெறுவது நடைபெருதகாரியம் இதுவும் ஒரு காரணமாக நாம் இத்தேர்தலிருந்து ஒதுங்கினேம்.

தமிழ் ஈழம் பிரிந்து இலட்சியத்துடன் வாழவேண்டும் என்பதே எமது இயக்கத்தின் நோக்கமாகும். தேர்தல் பகிஷ்காரம்கூட நடத்தக்கூடிய காரியம் அல்ல இது முற்ருக வெற்றிபெற முடியாதது.

### யார்வந்தாலும் நமக்கென்ன

தமிழ் ஈழத்தீவிரவாதிகள் என்று கூறியவர்கள்பலர்ஜனதிபதிதேர்தலில் சுதந்திரக்கட்சிக்கு வாக்கு அளித்துள்ளார்கள்.

கடைசியில் தமது சுயரூபத்தைக் காட்டி கொண்டுள்ளார்கள்.

ஜே. ஆர். வந்தால் என்ன, கொப்பேகடுவ வந்தால் என்ன நாம் ஆளப்படும்இனம்தானே?

சில இடதுசாரி கட்சிகள் என்னைச்சந்தித்து ஜனதிபதி தேர்தலின்போது ஒரு பொது வேட்பாளரை ஆதரிக்கக் கூடாதா? என கேட்டார்கள்.

ஆனல் இவர்கள் எமது உரிமைகளைப்பற்றி பேசாது விட்டார்கள். அதிலிருந்து புரிகின்றது எம்மை இவ்விடயத்தில் ஒருகருவியாக பாவிக்க எண்ணினர்கள்.

''எமதுமக்களின் உரிமைகளை பறிக்க விடமாட்டோம். ஜனதிபதி தேர்தலில் பங்கு பற்ருதது போன்று இதிலும் நாம் இருக்கமுடியாது. மக்களின் ஜனநாயக உரிமைகளை பறிப்பதற்கு எடுக்கப்படும் தந்திரமான விடயம் இதுவாகும்.

மக்களின் ஆணையாக 6வருடத்துக்குத்தான் நாம் தெரிவு செய்யப்பட்டோம். இந்த வகையில் 1983-ம் ஆண்டு ஜூலை 22-ம் திகதியுடன் மக்களின் பிரதிநிதியாக செயல்பட உரிமையற்றவர்கள்.

### பாராளுமன்ற பகிஷ்கரிப்பு

பாராளுமன்ற பகிஷ்கரிப்பு விடயம் ஒரு புத்திசாலித்தனம் அல்ல என்பதை உணர்கின்றோம். பல கட்சிகள் உள்ள விடுதலை இயக்கங்கள் பாராளுமன்ற தேர்தலில் கவனம் செலுத்தியுள்ளார்கள். பலத்தையும் வினைவுஇழப்பது நன்று அல்ல.

நாம் மீண்டும் 6 வருடத்துக்கு மக்களின் ஆணைபெற்றுத்தான் பாராளுமன்றத்துக்கு வரவேதான் உத்தேசித்துள்ளோம்.

சர்வசனவாக்கெடுப்பு மூலம் மக்கள் பிரதிநிதிகளின் உரிமைகள்மறுக்கப்படுகின்றது. சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கின்றது சுதந்திரத்திற்காக பாராட நாம் செயல்படவேண்டும்.

ஒரு இனம்விடுதலைகாண்பது மிகவும் கஷ்டமான விடயமாம், பங்காளதேசம் விடுதலை பெறுவதற்கும் இந்தியா உதவியதை அறிவீர்கள்.

அதேவேளை பங்களாதேசத்தில் 30 லட்சம் மக்கள் பலியுண்டார்கள். சுதந்திரம்பெற அயல்நாடுகளின் உதவிதேவை என்பதை உலக வரலாறு தெரிவிக்கின்றது.

நாம் சுதந்திர தமிழ் ஈழம் அமைப்பதற்கு எமது மாவட்டம்பாதுகாக்கப்படவேண்டும். மாவட்ட எல்லைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

6 தமிழ் மாவட்டங்களில் எமது மாவட்ட அபிவிருத்தி சபை அதிகாரங்கள் உள்ளது.

நாம் தீவிரமாக செயல்படாவிட்டால் தொடக்கினல் மற்றையபகுதியில் வாழும் எமது சகோதரர்கள் அடிபட்டு தாக்கப்படவேண்டியநிலைஏற்படும். இதை நாம் அனுமதிக்க முடியாது.

### மாவட்ட சபை பெற்றேம்

''20 வருடமாக தந்தை செல்வநாயகம் பெறமுனைந்த மாவட்டசபை அதிகாரத்தை தற்போது பெற்றுள்ளோம்.

எமது இலட்சியத்திலிருந்து எள் அளவும் விலகாது இருந்த ஒரே காரணத்தினல்தான் இந்த மாவட்ட அபிவிருத்தி சபைகள் ஏற்படுத்தப்பட்டது

''இப்போது எமது 6 தமிழ் மாவட்டங்களின் எல்லைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இராணுவம், சிங்கள பொலிஸ் படைகள் எமது இனத்தை வாழவிடாது தடுக்கின்றன. இவ்வேளையில் எமது பகுதிகளுக்கு பெருமளவுதமிழ்பொலிசார் தேவை, அத்துடன் ஊர் காவல்படை வேண்டும் என கோரிக்கை விட்டதின் பலனக இதில் ஓரளவு வெற்றி கண்டுள்ளோம்.

### தனிப்பெருமை

''அண்மையில் எனது வெளிநாடு சுற்றுபயணத்தின்போது அங்குள்ள முக்கிய பத்திரிகைகள் எல்லாம் எனக்கு தனிப்பெருமை கொடுத்தது

''இங்குள்ள தமிழ்மக்கள் தந்த ஒற்றுமையே அதற்கு காரணம் ஆகும்.

''இன்று தமிழ் நாட்டில் எமது பிரச்னையில் அனைத்து கட்சிகளும் குரல் கொடுக்கின்றது. அந்த அளவுக்கு எமது பிரசாரம் வெகுவாக வளர்ந்துள்ளது. நாம் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை செய்வதற்கு எமக்குள்ள அனைத்து சக்திகளையும் பயன்படுத்திவருகின்றேம்.

''எதற்கும் அவசரப்படாது எமது பாரம்பரிய பிரதேசத்தை முதலில் காப்பதும், மக்களின் பாதுகாப்புக்கு நடவடிக்கையும் எடுக்கவேண்டியதும் முதலில் உள்ளது.''

இக்கருத்தரங்கில் வவுனியா எம். பி. திரு. சிவசிதம்பரமும் பேசினர். ஆரம்பத்தில் இரு நிமிட மௌன அஞ்சலியுடன் கருத்தரங்கு ஆரம்பமானது.

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### சேயோன் மகேஸ்வரலிங்கம்

நாம் கதறிக் கலங்க சடுதியில் இறைவனடி சேர்ந்த கண்ணாவின் ஆத்மா இன்றைய திதியில் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேம்.

அப்பா, அம்மா, அக்கா, உறவினர்

15, மணல்தறை வீதி,
கந்தர்மடம். 5169

---

## புன்னலைக்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைத்து யாழ். சட்ட வைத்திய அதிகாரி எஸ் சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை நடத்தினர்.

துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் நிகழ்ந்த ஸ்தலத்துக்கு சுன்னகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொன் சுகுணேந்திரன், யாழ். பொலிஸ் அதிபர் ஏ. இ. ஆனந்தராஜா, உதவிப் பொலிஸ் அதிபர் ஜனப். எம். நிஸாம், காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் ஹெட்டி ஆராச்சி ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

பிரேத பரிசோதனையின்பின்னர் உறவினர்களிடம் இவரது சடலம் கையளிக்கப்பட்டது.

இராணுவத்தினரும் பொலிசாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (மா)

---

## மாணவர்கள் தண்டனை குறைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த 'ருக்கிங்' தொடர்பாக இடைநிறுத்தம் செய்யப்பட்ட 6 மாணவர்கள் மன்னிப்புக் கோரியதைத் தொடர்ந்து அவர்கள் தண்டனை குறைக்கப்பட்டுள்ளது

3 மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட தவணை இடைநிறுத்தம் ஆறு கிழமையாகவும், ஏனைய 3 மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட ஒரு தவணை இடைநிறுத்தம் 4 கிழமையாகவும் குறைக்கப்பட்டது.

[மா]

---

## மரண அறிவித்தல்

## வல்லிபுரம் தம்பாபிள்ளை

வல்லிபுரம் தம்பாபிள்ளை ஜே. பி. (புன்னலைக்கட்டுவன் வடக்கு) அகால மரணமானர்.

இவர் பூபதியின் அன்புக் கணவரும், பிரமேந்திரராசா, அம்பிகைபாகன், சிறீசதா, தெய்வேந்திரா, சுமித்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னரின் ஈமக்கிரிகைகள் 17-11-82 புதன் கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு வடக்குப் புன்னலைக்கட்டுவனில் நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

அறிவிப்பவர்: சிவரத்தினம் J. P.

5181

---

## பகிரங்க விற்பனை

நல்ல நிலையிலுள்ள,
ஒரே பாவனையிலுள்ளதுமான
மூன்று லொறிகள் விற்பனைக்குண்டு.
வாகனங்களைப் பார்வையிட்டு,
20-11-82 க்கு முன்
விண்ணப்பிக்கவும்.

24 ஸ்ரீ 4074 ரொயாரா
27 ஸ்ரீ 533 இசுசு E L F 250
22 ஸ்ரீ 681 ஒஸ்டின் 4 சிலிண்டர்

### மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்.

122, கே. கே. எஸ். வீதி., யாழ்ப்பாணம்.
போன்: 24267

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவனிகோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.